காஞ்சி

ஆசிரியர் : அண்ணாதுரை

விலை 20 காசு

கேள்வி? பதில்

(1) கருப்புப் பணத்தைக் கண்டு பிடிக்கும் விஷயமாகக் காங்கிரஸ் அரசு என்ன நடவடிக்கை மேற் கொள்ளப்போகிறது?

காங்கிரஸ் அரசு எந்த நட வடிக்கையும் மேற்கொள்ள இருப் பதாகத் தெரியவில்லை; ஆனல் கருப்புப் பணத்தைக் கண்டுபிடிப் பதில் காங்கிரஸ் தலைவர்கள் மும் முரமாகி விட்டிருக்கிருர்கள் என்று தெரிகிறது, தேர்தல் நிதி திரட்டுகிருர்கள். புரிகிறதல்லவா

(2) இந்திப் பிரச்சினையை வைத் துத் தேர்தலுக்கு நிற்கத் தயார் என்று காமராஜர் சவால் விடுகிருரே பார்த்தீரா?

பார்த்துக் கொண்டுதானிருக் கிறேன். ஆனல் நல்ல ஜனநாய கப் பண்புடன் நடந்துகொள்வ தானல், தேர்தல் முடிவுக்குப் பிறகுதான், இந்தியைப் புகுத்து வதா கூடாதா என்பதுபற்றிய சட்டம் சொண்டுவருவோம் இப் போதைக்கு ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்கும் என்று கூறியிருந்திருக்க வேண் டும். அந்தப் பண்புடன் காமரா ஜர் நடந்துகொள்ளக்காணுேமே.

(3) டாக்டர் சுகர்ணே, இந்தியா வைத் தாக்கிப் பேசுகிருரே, ஏன்?

மலேஷியாவை இந்தியா ஆத ரிக்கிறது என்பதால் டாக்டர் சுகர்ணே ஆத்திரம்கொள்கிருர். அவருடைய தூற்றல் பேச்சுக் கும், மிரட்டலுக்கும் பயந்து இந் தியா நியாயத்தின் பக்கம் சேரா மல் இருக்க முடியுமா?

(4) தி. மு. கழகம், இந்தி எதிப் புப் போராட்டத்தை இப்போது நடத்தாது என்பதைச் சிலர் கேலி பேசுவது ஏன்?

நொண்டி, ஓட்டயப் பந்தயக் காரனைக் கேலி செய்கிருன் என்று வைத்துக்கொள்ளேன்! நான் திருமணம் முடித்துக் கொள்ள ஏற்பாடு செய்துகொள் வதிலே மும்முரமாக ஈடுபட்டிருப் பதால் இபபோது ஓட்டப்பந்தயத் தில் கலந்துகொள்வதாக இல்லை என்று, பந்தயம் பலவற்றிலே கலந்துகொண்டவன் கூறும் போது, ஒரு பந்தயத்திலும் கலந்துகொள்ளாத நொண்டி கேலி பேசினல் எப்படி இருக்கும்! அப்படி இது! உலகிலே பல விசித்திரப் பிறவிகள்!

(5) உணவு வாணிபக் கார்ப்ப ரேஷன் நிலைமை எப்படி இருக் கிறது?

ஓஹோ என்று ஆரம்பிக்கப் பட்டது; இப்போது உயிர் ஊச லாடிக்கொண்டிருப்பது போன்ற நிலை. அந்தக் கார்ப்பரேஷன் நிர் வாகத் தலைவர் பாய், சர்க்காரின் நிர்வாகத் துறையிலே பல கோளாறுகள் இருப்பதால் கார்ப் பரேஷன் வேலை எதிர்பார்த்தபடி சீராக நடைபெறவில்லை என்று தெரிவித்துவிட்டிருக்கிருரே.

(6) சேலம் இரும்பாலை அமைத் துத்தீருவேன் என்று சபதம்செய்த அமைச்சர் வெங்கடராமன் என்ன செய்துகொண்டிருக்கிருர்?

ஐக்கிய நாடுகள் சபைக் கூட் டத்தில் கலந்துகொள்ளத் தயா ராகிவிட்டிருக்கிருர்; இங்கு இருந் தால் இரும்பாலைபற்றிக் கேட்டுக் குடைகிருர்கள், சில நாட்களுக் காவது நிம்மதியாக இருக்கலாம் என்று எண்ணுகிருர்போலும்.

(7) பஞ்சாபுக்கு ஒரு மக்கள் தலை வர் முதலமைச்சர் ஆக்கப்பட்டிருக் கிருர்! இவர், காமராஜர் கண் டெடுத்த சிங்கம் என்று புகழ்ந்தார் களே, அந்த ராம்கிஷன் நிலை இப் போது எப்படி?

சிங்கம் பங்கப்பட்டுக்கொண்டு வருவது தெரிகிறது. எதிர்ப்பைச் சமாளிககச் சிலருக்கு மந்திரி வேலை கொடுத்துப் பார்த்தும் பலன் இல்லை. மாநிலக் காங்கிரஸ் தலைவருக்கும் ராம்கிஷனுக்கும் தகருறு முற்றிவிட்டிருக்கிறது. ஆட்சி மகாமோசம் என்று கண் டிக்கிருர் மாநிலக் காங்கிரஸ் தலைவர். எந்தப்பக்கம் வலுவடை கிறதோ அந்தப்பக்கம் சேர்ந்து கொள்ளலாம் இப்போது நாமா கச் சென்று வம்பை விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டாம் என்ற போக்கிலே காமராஜர் இருந்து வருகிருர்.

(8) காங்கிரஸ் ஆட்சியை ஆத ரிக்கிறேன், பக்தவத்சலம் ஆட் சியை மட்டும் எதிர்க்கிறேன் என்று பேசுவது எப்படி இருக்கிறது?

காங்கிரசை வெறுக்கிறேன் ஆனல் காமராஜரை ஆதரிக் கிறேன் என்று முன்பு பேசப் பட்டதல்லவா, அதுபோல இது ஒரு ரகம். துணி நன்ருக இருக் கிறது, ஆனல் பொத்தல் அதி கம் என்பதுபோன்ற பேச்சு.

(9) காங்கிரஸ் கமிட்டி ஊர்வலம் தடபுடலாமே?

ஆமாம்! நெருக்கடி நேரம், ஆடம்பரத்தைக் குறைத்தாக வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிருர்கள் அல் லவா! சொன்னபடி நடக்கலாமா! மிகத்தவறு அல்லவா! ஊருக்குத் தான் உபதேசம்!!

(10) மறுபடியும் விஜயலட்சுமி பண்டிட் காங்கிரஸ் ஆட்சியைக் கண்டித்துப் பேசி இருககிருரே!

ஆமாம், பேசுகிருர்! தைரிய மிருந்தால், இப்படிப் பேசினல் நடவடிக்கை எடுப்பேன் என்று கூறட்டும் பார்க்கலாம் காம ராஜர்-

★

காஞ்சி

மலர் 1 27—6—65 இதழ் 46

ஓட்டாண்டியாக்கிவிட்டு!

ரூபாயின் மதிப்பு குறைந்துவிட்டிருக்கிறது.

ஸ்டர்லிங் இருப்பு தேய்ந்துவிட்டிருக்கிறது.

கடன் சுமை அதிக அளவுக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது.

துரைத்தனம் பொறுப்பேற்று நடத்தும் தொழில் அமைப்புகளில் நட்டம் ஏறிக்கொண்டிருக்கிறது.

உணவுத்துறையிலே ஏற்பட்ட நெருக்கடி நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது.

இறக்குமதி — ஏற்றுமதி இரண்டுக்கும் இடையே உள்ள பள்ளம் நிரப்பப்படாமல், வாய் திறந்துகொண்டிருக்கிறது.

கள்ளப் பணத்தை வெளியே கொண்டுவர எடுத்துக்கொண்ட முயற்சியில் மகிழத்தக்க அளவு வெற்றி கிட்டியபாடில்லை.

பெரிய புள்ளிகள் நடத்திவரும் கள்ளக்கடத்தல்-குறிப்பாகத் தங்கக் கள்ளக்கடத்தல்-நடந்தபடி இருக்கிறது.

தொழில் துறையின் பெரிய புள்ளிகள் செலுத்தாமலிருக்கும் வரித்தொகையின் அளவு கணிசமான முறையில இன்னமும் குறைக்கப்படவில்லை.

ஏழை மக்களை வேதனையில் ஆழ்த்தும் 'மறைமுக வரிகள்' வகையிலும் அளவிலும் வளர்ந்தபடி உள்ளன.

வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமை பரவியபடி இருக்கிறது.

தொழிலாளர்களின் துயரம் தொடர்ந்து இருந்து வருகிறது.

விவசாயிகளின் விசாரம் துடைக்கப்படவில்லை.

ஏழை-பணக்காரர் பேதம் ஆழமாகி வருகிறது.

நிர்வாக ஊழல் பெருத்து வருகிறது; ஊதாரிச் செலவு பெருகி வருகிறது.

இலஞ்சம் எல்லா மட்டத்திலும் ஊடுறிவிக் காணப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியிடம் உள்ள பதவியைப் பறித்துக்கொள்ள வேண்டும் என்ற கெட்ட நினைப்புக்காரர்கள் அல்ல, பொருளாதாரத்துறை வித்தகர்கள், நிர்வாகத் துறையிலே பயிறசிபெற்ற நுண்ணறிவினர், கூறுகிறார்கள்--ஆராய்ந்துபார்த்த பிறகு—அருவருப்பு, பொருமை காரணமாக அல்ல-பொறுப்புணர்ச்சியுடன்.

அவர்கள் கூறியுள்ள ஒவ்வொன்றுக்கும், எவரும் ஒப்புக்கொண்டு தீரவேண்டிய அப்பழுககற்ற ஆதாரங்களைக் காட்டுகிறார்கள். தாம் எடுத்துக் கூறுவதுபற்றி எவர் மறுத்துரைத்தாலும், புள்ளி விவரம்கூடத் தந்து, தமது கருத்தினை மெய்ப்பித்துக்காட்ட முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு துறையிலும் நெளிந்துகொண்டுள்ள கேடுகளை நிபுணர்கள் எடுத்துக்காட்டும்போது, சர்க்காரின் குறிப்பேடுகள், வெளியீடுகள், அறிக்கைகள் ஆகியவைகளிலிருந்தே மறுக்கொணாத ஆதாரங்களை எடுத்துக்காட்டுகின்றனர்.

உள்ளகேடுகளை-ஏற்பட்டுவிட்ட கேடுகளை-சுட்டிக் காட்டும்போது காங்கிரசின் பெரிய தலைவர்களுக்குக் கோபம் வருகிறது, எதிர்க்கட்சிகள் மீது பாய்ந்து எறிச்சலைக் துடைத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள்; ஆனால் நிபுணர்கள் எடுத்துக் காட்டியுள்ளவைகளை மறுத்துப் பேசவில்லை முடியாததால்!

பணவீக்கம், வரி ஏற்றம், விலை ஏற்றம், வாட்டம் இவைகளை மக்களின் முகத்திலே படிந்துபோயுள்ள கவலைக்கோடுகளும் கண்களைக் கப்பிக்கொண்டுள்ள சோகமும் எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கும்போது, தலைவர்கள் மறுப்புப்பேசி என்னபயன் காணமுடியும்! எனவே நிபுணர்கள் கூறும்போது வாய்மூடிக்கொண்டிருந்துவிட்டு, நிலைமை இவ்விதமாகிவிட்டிருக்கிறதே உமது ஆட்சியில், இதற்குப் பொறுப்பேற்கவேண்டியவர்கள் யார்? நீவிரல்லவா? என்று எதிர்க்கட்சியினர் கேட்கும்போது கொதித்தெழுந்து, பார் உன்னுலானதை! என்று முழக்கம் எழுப்புகின்றனர்.

ரூபாயின் மதிப்பு குறைந்துவிட்டது என்பது முகற்கொண்டு ஊழல் மிகுந்துவிட்டது என்பது வரையில் எதனையும் மறுத்திட முடியவில்லை ஆட்சியிலுள்ள காங்கிரஸ் தலைவர்களால்.

சில தலைவர்கள், இந்தக் கேடுகள் உள்ளன என்று ஒப்புக்கொண்டும் பேசியுள்ளனர்.

திட்டத்தின் பலன் ஏழைக்குப் போய்ச் சேரவில்லை என்பதனைக் காமராஜர் ஒப்புககொண்டு விட்டிருக்கிறார். ஆனால் வெட்கப்படவில்லை, வேதனைப்படவில்லை!!

தொழிலாளர்கள் சுறண்டப்படுகிறார்கள், முதலாளிகள் கொழுக்கிறார்கள் என்பதனைத் தொழிலாளர் மந்திரி சஞ்சீவய்யா ஒப்புக்கொண்டிருக்கிறார்; ஆனால் இந்த நிலைக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் நாமல்லவா என்ற உணர்வு மட்டும் காணோம்.

மறுக்க முடியவில்லை, சிலர் ஒப்புக்கொண்டு தீர வேண்டியுமிருக்கிறது. கேடுகள் மூண்டு விட்டுள்ள நிலைமையினை. எனினும், மறுபடியும் எமக்கே ஓட்டுப் போடவேண்டும் என்று கேட்கிறார்கள்.

ஓட்டாண்டியாக்கிவிட்டு ஓட்டும் கேட்கிறார்கள். எதனால் கிடைக்கிறது இந்தத் துணிவு? தேர்தல் நேரத்தில் மக்களின் கவனத்தைத் திசைதிருப்பிவிடலாம், நாக்கில் தேன்தடவி விடலாம் ஆசா பாசத்துக்கு ஆட்படுததி விடலாம என்ற தைரியம் இருக்கிறது காங்கிரஸ் தலைவர்களுக்கு.

எந்தவிதமான சபலத்துக்கும் இரையாகமாட்டோம், எமக்கு இத்தனைக் கேடுகளை விளைவித்த ஆட்சிக்குத் தக்க பாடம்புகட்டுவோம் என்று மக்கள் உறுதிகொண்டிட வேண்டும். அந்த உறுதியை ஊட்டுவதும் வளர்ச்செய்வதும் எந்த அளவு வெற்றிகரமாக நடைபெறுகிறதோ அதைப் பொறுத்தே மக்களின் எதிர்காலம் ஒளிமயமாகப்போகிறதா, இருள் நீடிக்கப் போகிறதா என்பது இருக்கிறது.

கேஸ் நெ. 24830.

முமனிதவர்க்கத்தின் முதல் எதிரி நோய். 'கேன்ஸர்' பயங்கரமான வியாதிகளில்ஒன்றாகும். நாம் இதைபுற்று நோய் என்கிறோம். 'கேன்ஸர்' எனும் சொல் இப்போது நம் காதுகளில் அடிக்கடி விழுகிறது. இந்த நோய்க்கு 'ஆதி, அந்தம' இரண்டும் இன்னமும் தெரியவில்லை, இப்போது ஆயிரத்தில் பத்து பேருக்கு இந்த நோய் வருவதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நோய் வந்து குணமானவர் எண்ணிக்கை மிகக் குறைவே! இந்த நோய் வருவதற்கு முன்பும் அறிகுறிகள் தெரிவதில்லை வந்த பின்பும் தெரிவதில்லை. ஓரளவு நோய் முற்றிய பிறகே கண்டு பிடிக்க முடிகிறது!

வளர்ந்துவரும் விஞ்ஞான உலகத்திற்கு இது ஒரு சவாலாகவே இருந்து வருகிறது.

இந்த நோய்க்கு, 'ரேடியம், கோபால்ட்' முறைகளில் சிகிச்சை செய்வதும் உண்டு. சில வேளைகளில் அறுவை சிகிச்சை நல்ல பலனை கொடுக்கிறது. முதலில் சொன்ன முறையில், சிகிச்சைக்குப் பிறகு 'கேன்ஸர்' வேறு இடங்களுக்கு பரவுவதற்த வழி இருக்கிறது. ஆனால் அறுவை சிகிச்சை முறையில் இந்த வழிகள் மிக குறைவு. நோயின் வளர்ச்சி, நோய் வந்திருக்கும் இடம் இதை பொறுத்தே, சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முதலில் இந்த நோய் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே வரும் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது, இந்த நோய் எல்லா வயதினருக்கும் வருகிறது. புகையிலை, சிகெரட் முதலியவை உபயோகிப்பவர்களுக்கு மட்டுமே இது வரும் எனும் ஓர் எண்ணமும் இருந்தது.

லாகிரி வஸ்துக்கள் உபயோகிக்காதவர்களுக்கும் இது வருகிறது! உபயோகிககிறவர்களுக்கு இது வராமலும் இருக்கிறது'!

அநேகமாக இது வரும் இடங்கள் தொண்டை. நுரையீரல், மலக்குடல் கருப்பை, மாாபகம் (பெரும்பாலும் பெணகளுக்கு.)

அறுவை சிகிச்சை மூலம் நல்ல குணம் கிடைப்பதாக நினைக்கிறார்கள்.

அறுவை சிகிச்சை செய்வது, சிறந்த, கைதேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்களாலே மட்டும் முடியும்.

சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள், செய்தாலும் இந்த அறுவை சிகிச்சை முறை எவ்வளவு கடினமானது. விஞ்ஞானமும், மருத்துவமும் எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பதை அறிவதற்கு கீழே எழுதப்பட்டிருக்கும் இந்தக் கட்டுரையை படித்துப் பார்த்தால் தெரியும்.

எதிரே மாட்டப்பட்டிருந்த 'எக்ஸ்ரே' படத்தை பார்த்து டாக்டர்கள் பேசிக் கொண்டிருந்தனர். அந்த 'எக்ஸ்ரே'வில், இடதுபுற

"பரி"

நுரையீரல் நோயால் தாக்கப்பட்டிருப்பது தெரிந்தது. இடது நுரையீரலின் மேல் பாகத்தில் கறுமை நிறம் பரவியிருந்தது.

இந்த எக்ஸ்ரே படத்துக்கு சொந்தக்காரருக்கு இன்று அறுவை சிகிச்சை.

நோயாளி அறுவை அறைக்கு கொண்டுவரப்பட்டார். அவருக்கு வயது 58.

மணி 8-10!

இரண்டு பெரிய டாக்டர்கள்; மயக்கமருந்து கொடுப்பவர், இரண்டு நர்சுகள், யாவரும் உள்ளே நுழைந்தனர்.

மயக்க மருந்து கொடுக்கும் டாக்டர், நோயாளிக்கு ஒரு 'இன்ஜெக்ஷன்' கொடுத்தார். நோயாளியை ஒன்று, இரண்டு என்று எண்ணச் சொன்னார்கள் நோயாளி எண்ண ஆரம்பித்தார்.

ஒன்று, இரண்டு, மூன்று. நான்கு, ஐந்து......ஆறு. அவருக்கு நினைவு தப்பிவிட்டது! மேலும் இரண்டு இன்ஜெக்ஷன்கள் கொடுக்கப்பட்டன.

ஒரு 'இன்ஜெக்ஷன்' தொண்டைக் குழியில! அறுவை சிகிச்சை நடக்கும் போது இருமல் வராமல் தடுக்க! அடுத்தது, தசைகள் துள்ளுவதை தடுக்க!!

டாக்டர்கள் கையுறைகளை அணிந்துகொண்டனர்.

மயக்க மருந்து கொடுத்த டாக்டர் நோயாளியின் அருகில் அமர்ந்துகொணடார், நாடியைப் பார்க்க! இரத்த அழுத்தத்தையும் சோதிக்க!!

நேரம் 8-55!

டாக்டர், நர்ஸிடம் இருந்து கத்தியை வாங்கிகொண்டார்.

முதலின் நெஞ்சின் நடுவில் இருந்து முதுகு பக்கம்வரை ஒரு கோடு!

தோல் கிழிக்கப்பட்டது! பிறகு தசை!!

இவைகளுக்கு நடுவில் இருக்கும், இரத்தக் குழாய்கள் அறுபட்டு ரத்தம் கசிய ஆரம்பித்தது. கிளிப்புகளை பொறுத்தி ரத்தம் கசிவதை நிறுத்துகிறார்கள். பிறகு அந்த ரத்தக் குழாய்கள் பட்டு கயிறுகளால் கட்டப்படுகிறது. கடைசியாக முக்கியமான தசையும் (லேட்டிஸ்மஸ் டார்ஸை) வெட்டப்படுகிறது. அதை பிரித்ததும், விலா எலும்புகள் தெரிகின்றன. டாக்டர் ஒன்று, இரண்டு. மூன்று, என்று விலா எலும்புகளை எண்ணுகிறார்! ஐந்தாவது விலா எலும்பு உடைத்து எடுக்கப்படுகிறது!

விலா எலும்பை நர்ஸிடம் கொடுக்கிறார் டாகடர்!

நுரையீரல் இப்போது நன்றாகத் தெரிகிறது.

இப்போது மணி 9-35!

டாக்டர் கேட்கிறார் மற்றொருவரை! "எப்படி இருக்கிறார்?"

"நன்றாகவே இருக்கிறார். எல்லா உறுப்புகளும் நன்றாக வேலை செய்துகொண்டு இருக்கின்றன."

டாக்டர் ஒருசிறுதுண்டை, பாதிக்கப்பட்ட பாகத்தை அறுத்து எடுத்துவிடுகிறார், அதை நர்ஸிடம்

(15-ம் பக்கம் பார்க்க)

தம்பி

இடியோசையில் கிடைக்காது இன்பநாதம்

பென்பெல்லா பதவியிலிருந்து விரட்டப்பட்டார்; அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது; இருக்குமிடம் அறிவிக்கப்படவில்லை; என்ன கதி என்பதுபற்றிக் கேட்பவர்களிடம் கொடுங்கோலர்கள் என்ன கதி அடைந்தார்களோ அதுதான் இவருக்கும் என்ற பதில் அளிக்கப்படுகிறது; பட்டாளத்துத் தலைவர் பட்டத்துக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. திடுக்கிடச் செய்திடும் இந்தத் திடீர்மாற்றம், அல்ஜீரியா நாட்டில் நடைபெற்றிருக்கிறது.

பென்பெல்லாவிடம் அல்ஜீரிய மக்கள் சொக்கிக்கிடக்கிறார்கள் என்றும், அவருடைய சுட்டுவிரல் அசைவு கண்டு அதன்படி நடந்திடத் துடித்தபடி உள்ளனர் என்றும், அவருடைய அறிவாற்றலையும் தன்னலமற்ற போக்கையும் ஆபத்துக்களைத் துச்சமென்றெண்ணிச் செயலாற்றும் துணிவினையும், நாடுவாழ மக்கள் ஏற்றம்பெற ஓயாது உழைத்திடும் ஆர்வமிகுதி பற்றியும் கனிவுடன் பேசினர் பலப்பலர்; கவிதைகள் புனைந்தனர் மற்றும் சிலர்; காட்சிகளைப் படமாக்கிப் பார்வைக்குத் தந்தனர் செய்தி அறிவிப்போர்.

அல்ஜீரிய விடுதலைக்காக பென்பெல்லா போராடி வந்த நிகழ்ச்சியே நாட்டின் பெருங்காப்பியமாகிவிட்டது என்று கூறப்பட்டது. பென்பெல்லா பிரஞ்சு அரசினரால் சிறைப்படுத்தப்பட்ட செய்தி கேட்டபோது அல்ஜீரிய மக்கள் பதறினர்; உள்ளம் உருகிடும் நிலையினராயினர்.

பென்பெல்லா, பிரன்ச்சு சிறையினின்றும் எப்படியோ தப்பித்துவிட்டார்; பிடிபடவில்லை; பிரன்ச்சுக் கொடியவர்களின் கரங்களால் தீண்டப்பட முடியாத நெடுந்தொலைவு சென்றுவிட்டார்; உலவுகிறார் முழக்கமிட்டபடி; அல்ஜீரியா விடுதலை அடையா முன்பு நான் இறந்துபடுவேனோ! நான் இருப்பது எதற்கு? என் நாட்டை விடுவிக்க! என் நாடு விடுவிக்கப்பட்டது என்ற இன்பச் செய்தி கிடைத்த பிறகே அந்தச் செய்தி எனது இமைகளைத் தடவிடும்போதுதான் எனக்குத் துயில்கொள்ளவே இயலும்! இப்போது எனக்கு வேறு எதற்கும் நேரம் இல்லை; விடுதலைப் போராட்டத்துக்குத் தவிர!—என்றென்று கூறுவார் எம் தலைவர்!! அவரைக் கொன்றுவிட முடியுமா பிரன்ச்சுக் கொடியவர்களால்! எழுச்சியை மாய்த்திட இயலுமோ!! — என்றெல்லாம் நாட்டுப்பற்று மிக்கவர்கள் கூறினர் எக்களிப்புடன்; புரட்சிப்போராளிகளைப் பிரன்சுக்காரர்கள் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் தாக்கினர், வெட்டி வீழ்த்தினர்; புரட்சியாளர் பலப்பல ஆயிரவர் சுட்டுத் தள்ளப்பட்டனர்; இறந்துபடுமுன்பு அவர்கள், வாழ்க அல்ஜீரியா! வாழ்க பென்பெல்லா! என்று முழக்கமிட்டனர்; அந்த இன்ப எண்ணம் தந்த புன்னகைபூத்த முகத்துடனேயே வீழ்ந்தனர் அவ்வீரர்கள்.

காவியச் சிறப்புக்குரியதான வீரதீரச் செயல்களை வெற்றியுடன் நடத்திக்காட்டியவர் நாட்டுப்பற்றுமிக்கவர், மக்களுக்கு வழிகாட்டி, என்றெல்லாம் புகழாரம் சூட்டப்பட்ட நிலையில் இருந்துவந்தவர் பென்பெல்லா. நாடுகள் பல, அவரே அல்ஜீரியா நாட்டின் ஒப்புயர்வற்ற தலைவர் என்று ஏற்றுக்கொண்டன. அவருடைய அழைப்பினைப்பெற்ற பல நாடுகள், அல்ஜீரியத் தலைநகரில் கூடி, பாண்டுங் மாநாட்டிலே பெற்ற 'பஞ்சசீல'த்தை மேலும் பேணி வளர்த்திட வழிகாண மாநாடு நடத்தவும் திட்டம் வகுத்தன. அதற்கான ஏற்பாட்டிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார் பென்பெல்லா என்ற செய்தி அடிக்கடி வெளிவந்தபடி இருந்தது. குமுறல் எதிர்ப்



புணர்ச்சி குறிப்பிடத்தக்க அளவு இருப்பதாகக்கூடத் தகவல் ஏதும் தரப்படவில்லை. சிரித்திடும் முல்லைக் கொடி, குதித்திடும் பூங்கா, திடீரெனக் கிளம்பிய புய லால் பெயர்த்தெறியப் பட்டுவிடுவதுபோல, வெடித்த எதிர்ப்பு, பென்பெல்லாவை உச்சியிலிருந்து ஒரே அடி யாகக் கீழே உருட்டிவிட்டது. அவருக்கு அடுத்த இடத்தில் இருந்துவந்தவர் பெதோமின் என்பார் இப் போது, அல்ஜீரிய அரசு எம்மிடம்! இராணுவத்திடம்! இராணுவம் ஜனநாயகத்தைக் காப்பாற்ற, கொடுங் கோலனை வீழ்த்த நடவடிக்கை எடுத்துக்கொண்டது; இது அல்ஜீரியாவின் மக்களின் நலனுக்காகச் செய்யப் பட்டுள்ள மாறுதல்; மற்ற எந்தத்துறையிலும், அதி லும் குறிப்பாக வெளிநாடுகளுடன் அல்ஜீரியா கொண் டுள்ள தொடர்பு நிலையைப் பொருத்தவரையில் எந்த விதமான மாறுதலும் இல்லை என்று தெரிவித்திருக் கிறார்.

வெளி உலகுக்குக் கனிவுடன் செய்தி அளித்திடும் புதியவர், பென்பெல்லா பற்றிய கேள்வி எழும்போது மட்டும் கொதிப்புடன் பேசுகிறார்; பென்பெல்லா செய் துள்ள கொடுமைகள் உங்களுக்குத் தெரியாது என்கிறார்.

பென்பெல்லாவுக்கு நேரிட்டு விட்டதுபற்றி எண் ணிடும்போது, திகைப்பாகவும் இருக்கிறது; அதே போது நாட்டு விடுதலைக்காக அரும்பாடுபட்ட தலை வனுக்கா இந்தக்கதி! என்று பதைபதைத்துக் கேட்கத் தோன்றுகிறது.

பென்பெல்லாவிற்கு ஏற்பட்டதுபற்றி பதறு கிறோம், ஆனால் பென்பெல்லா அரசுத் தலைவரான உடன், எதிரிகள், வேண்டாதவர்கள், கருத்து மாறு பாடு கொண்டவர்கள் ஆகியோரை என்ன செய்தார் என்று பார்க்கும்போது, அருவருக்கத்தக்க, கண்டிக் கத்தக்க முறையிலேதான் நடந்துகொண்டார் என்பது தெரிகிறது. விடுதலைப் போரில் பெரும்பங்கெடுத்துக் கொண்டவரும், பென்பெல்லா அல்ஜீரியாவில் இல்லாத நாட்களில் தலைமை ஏற்றிருந்தவருமான அபாஸ், சிறையில் தள்ளப்பட்டார்; வேறுபலர் சுட்டுத்தள்ளப் பட்டனர்; பலர் நாடு கடத்தப்பட்டனர்; சிலர் தப்பி ஓடிவிட்டனர்; அப்படித் தப்பி ஓடியவர்கள்மீது வழக்குத் தொடுக்கப்பட்டு, 'மரண தண்டனை' தரப்பட்டது.

அப்படி மரண தண்டனை விதிக்கப்பட்ட கிதர் என் பார், ஸ்பெயினில் மாட்ரிட் நகரில் தங்கியிருக்கிறார். அவருடைய திட்டப்படிதான், பென்பெல்லா கவிழ்க்கப் பட்டார் என்றும் செய்தி உலவுகிறது.

பென்பெல்லாவின் ஆதரவாளர்கள் கிளர்ச்சி நடத்துவதாகவும், அதனை அடக்குமுறையால் புது அரசினர் அழித்திட முனைவதாகவும், துருப்பு நட மாட்டம், டாங்கிகள் நடமாட்டம், வேட்டுச்சத்தம் மும் முரமாக இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

தம்பி! இந்தமடல் உன்கரம் கிடைத்திடுவதற்குள் வேறு என்னென்ன நிகழும் என்று கூறுவதற்கில்லை.

நான் எழுதுவது நடைபெற்றது நியாயமா அல் லவா என்பதுபற்றிய கருத்துத் தெரிவிக்கவோ, எதிர் காலத்தில் என்ன நடந்திடும் என்று ஆருடம் கணித் திடவோ, அல்ஜீரியாவின் நிலைபற்றி எடுத்துக்கூறவோ அல்ல.

பொதுவான இரண்டு கருத்துக்களை எடுத்துக் காட்டமட்டுமே, பென்பெல்லா கவிழ்க்கப்பட்டதுபற்றிக் குறிப்பிட்டேன்.

ஒன்று, உண்மையான, ஜனநாயகம் நிலைத்து நின்றாலொழிய அரசியல் என்பது அதிர்ச்சிகளும் அமளிகளும், திடுக்கிடும் நிகழ்ச்சிகளும் திடீர்மாற்றங் களும் கொண்டதாகிவிடும்; சதிகாரர்கள், பதுங்கிப் பாய்வோர், அடுத்துக்கெடுப்போர் அமளிமூட்டுவோர் ஆகியோர் மட்டுமே பங்குகொள்ளத்தக்க துறையாகி விடும், அரசியல்.

வெடிகுண்டுகள்தான் பிரச்சினைகளைத் தீர்க்கும்; கூடிப்பேசுதல், கருத்தறிதல், விட்டுக்கொடுத்தல், இணைந்திருத்தல் என்பன, பொருளற்றபேச்சாகிவிடும். சுடு! அல்லதுசுடப்படு! கொல்லு! அல்லது மடிந்துவிடு! என்றநிலை ஏற்படும். ராணுவத்தை எவர் தமது பக்கம் கொண்டுசெல்ல முடிகிறதோ, அவரே மற்றவர்களை மிரட்டவும், அரசினைக் கைப்பற்றிடவும் முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிடும். அந்த நிலையில், அரசியல் நட வடிக்கைகளிலே பொதுமக்களுக்குத் தொடர்பு, தோழமை ஏதும் இருந்திடமுடியாது. வல்லான் வகுத் ததே வாய்க்கால் என்றாகிவிடும். அரசு அமைப்பவர் களாக அல்ல, அரசுக்கு அஞ்சி அஞ்சிக்கிடப்பவர் களாகிவிடுவர் மக்கள். எந்தச்சமயம் என்ன நேரிடும், எந்தமுறை எத்தனை காலம் இருக்கும், எவர் எத்தனை நாள் தலைமையில் இருப்பார், எவர்வழி ஏற்றவழி, எந்த வழி நீண்டநாட்களுக்கு மேற்கொள்ளத்தக்கவழி என் பதுபற்றி எல்லாம் ஒரே குழப்பம் ஏற்பட்டு, பீதி ஏற் பட்டு, மக்கள் பதறிக்கிடப்பர். அந்தநிலையில் வாழ்வு செம்மையாக இருந்திட இயலாது; தொழில்வளம் ஏற் படாது; அகப்பட்டதைச் சுருட்டுவது, அடிவருடிக் கிடப்பது, வதைபட்டுச்சாவது என்ற கொடுமை மிகுந்துவிடும். படைபலம் காட்டிப் பதவி பறிப்பவன் இறுதிவரை அந்தப் படைபலத்தை நம்பியே வாழ வேண்டும்; அதுபோன்ற படைபலம் வேறு எவரிடமும் சேர்ந்துவிடாதபடியும் பார்த்துக்கொண்டாகவேண்டும். தனக்குக் கிடைத்துள்ள ஈடு எதிர்ப்பற்ற பதவிமீது வேறு எவருக்கும் ஆவல் எழாதபடி பார்த்துக்கொண் டாகவேண்டும்; எவருக்கேனும் அவ்விதமான ஆசை தோன்றினால், முளையிலேயே கிள்ளி எறிந்திட முனைய வேண்டி நேரிடும்! எவரிடமும் சந்தேகம்! எதற்கெடுத் தாலும் ஆத்திரம்! எவரிடமும் உண்மையைக் கூறாம லிருக்கும்போக்கு! இப்படிப்பட்ட இயல்புகள் நோயாகி விடும்!

நோய் முற்ற முற்ற, என்னாலன்றி வேறு எவரா லும் இந்தச் செயலைச் செய்திடமுடியாது என்ற எண்

ணம் இறுமாப்பாகி, எவரேனும் நட்புரிமையுடன், இதனை இப்படிச் செய்திடலாமே என்ற யோசனையை, கனிவுடன், மரியாதையாகக் கூறினால்கூடக் கொதித்துக் குதித்து, என் முறையில் தவறு கண்டுபிடிக்கும் அளவு பெரியவனாகிவிட்டாயா!! அவ்வளவுக்குவளர்ந்து விட்டதா உன் ஆணவம்! என்று கொக்கரிக்கவும், அவனைப் பகைவனாகக்கருதிக்கொள்ளவும் முற்படுவர். விளைவுகள் வேதனை தருவனவாகிவிடும்—நாட்டுக்கு—மக்களுக்கு.

உண்மையான ஜனநாயகத்திலேதான் எத்தனை பெரிய வலிவுடன்உள்ள ஆட்சித் தலைவரிடமும், குறைகாண, மாற்றுமுறைகூற, திட்டத்தைக் கண்டிக்க மற்றவர்களுக்கு உரிமை கிடைக்கிறது.

குறை கூறுவதில், கண்டிப்பதில், எதிர்ப்பதில் ஒரு சுவை இருக்கிறது என்பதற்காக அல்ல அந்த முறை இருப்பது; குறை கூறும் உரிமை கொண்டவர்கள் இருக்கிறார்கள், எதிர்த்திடும் வாய்ப்புப் பெற்றவர்கள் இருக்கிறார்கள், அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுதான் அரசாளும் அவையில் அமர்ந்திருக்கிறார்கள், நம்முடைய ஆட்சியிலே மக்கள் அருவருப்பு அடைவார்களானால், எதிர்வரிசையினரை அழைத்து ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிடக் கூடும், ஆகவே அவர்கள் குறைசொன்னால்பொறுமையுடன் கேட்டுக்கொள்ளத்தான்வேண்டும், பொறுப்புடன் பதிலளிக்கத்தான்வேண்டும், என்ற மரபு ஏற்படுகிறது, அதன் காரணமாக, எவரும் எம்மை மிஞ்சுவார் இல்லை என்ற இறுமாப்பு பெறமுடியாதுபோகிறது; மக்களை மதித்து நடந்திடும் மாண்பு மணமளிக்கிறது. இவ்வளவும் உண்மையான ஜனநாயகம் இருக்கும் இடத்தில்! ஒப்புக்கு ஜனநாயகம் உள்ள இடத்தில் அல்ல! உள்ளத்தில் ஜனநாயகம் குடிகொண்டுள்ள இடத்தில்; உதட்டளவு உறவாடும் இடத்தில் அல்ல!!

உண்மையான ஜனநாயகம் நடைமுறையில் இருக்கும் இடத்தில் அரசாள்வோர் மாறுவர்; அதிர்ச்சி காரணமாக அல்ல, அமளி காரணமாக அல்ல, மக்களின் விருப்பத்தினைக் கேட்டுப் பெற்றிடும் முறையினால். ஆட்சித் தலைவர்கள் மாறுவார்கள், தலைகள் உருளாது! அரியணையில் புதியவர் அமருவார், பழையவர் சிறைப்படமாட்டார்! அரசியலில் நாகரிகம் மிளிரும்; நட்புரிமை திகழும்! நாட்டுக்குத் தொண்டாற்றுவதில் போட்டி இருக்கும், "நானா நீயா" என்ற காட்டுமுறை எழாது.

இந்தப் பண்பு ஜனநாயகத்தின் மூலமாக மட்டுமே பெறமுடியும்.

நாட்டாட்சி நடத்திடும் உரிமை அனைவருக்கும் உண்டு என்ற எண்ணமும்,

நாடு எப்படி ஆளப்பட்டு வருகிறது என்று விழிப்புடனிருந்து பார்த்துக் கொள்ளவேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு என்ற எண்ணமும்,

நாட்டு மக்களைக் கெடுத்திடும் போக்கிலே ஆட்சி நடத்துவோரை நீக்கிடும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு என்ற எண்ணமும், உண்மையான ஜனநாயகத்துக்கு அடிப்படை! அந்த வலிவு மிக்க அடிப்படை மீது அமைக்கப்படும் அரசுகளில் அதிர்ச்சிகளும் அமளிகளும், தூக்கிலிடுதலும் சுட்டுத் தள்ளுவதும், சிறையில் பூட்டுவதும் சித்திரவதை செய்வதும், நாடு கடத்துவதும் நாசம் விளைவிப்பதும் ஏற்படாமல், அரசாள்வோர் மாறிடுவர்; மாற்றப்படுவர்.

அவ்விதமாக அதிர்ச்சியற்ற, அமளியற்ற முறையிலே மாற்றம் ஏற்பட்டால்தான், சமூகம் பீதியின்றி, கட்டுக்கோப்பு குலையாமல் இருந்திட முடியும்; மக்கள் தமது வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ளும் செயலில் தொடர்ந்து அக்கறை காட்டி ஈடுபட்டு, பலன்பெற முடியும்.

பூங்காற்று வீசுமிடத்திலேதான் இனிமை அளித்திடும் குழலோசை எழுப்பிட இயலும்; வேட்டுச் சத்தம் காதினைத் துளைத்திடும் களத்தில்? இயலாது!

அல்ஜீரியாவில் மட்டுமல்ல, உண்மையான ஜனநாயகம், நல்ல வலிவான அடிப்படையில் அமையாதிருக்கும் நாடுகளிலே, அரசியல் அமளி நிரம்பியதாக இருந்து வருவதும், அதன் காரணமாக மக்கள் அலைக்கழிக்கப்பட்டு வருவதும் காண்கிறோம். அத்தகைய இடங்களில் பகை கப்பிக்கொள்கிறது, பழி தீர்த்துக் கொள்ளும் போக்கு தலைவிரித்தாடுகிறது, மக்கள் தங்கள் எதிர்காலம் எப்படியோ என்ற பீதியால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அல்ஜீரியாவில் ஏற்பட்டது பற்றிப் படித்தபோது, தம்பி! நான் உண்மையான ஜனநாயகத்தின் அருமையினை உணர்ந்து உவகை கொண்டேன்; அதனை உன்னுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

கன்சர்வேடிவ் கட்சித் தலைவரிடமிருந்து தொழிற் கட்சித் தலைவர் வில்சன் ஆட்சிப் பொறுப்பைப் பறித்துக்கொண்டார்; பறித்துக்கொண்டார் என்று கூறுவது கூடத் தவறு; பெற்றுக்கொண்டார்.

இப்போது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பதவி இழந்த ஹோம், பதவி வகிக்கும் வில்சனுக்கு எதிர் வரிசையில் அமர்ந்திருக்கிறார். பெதேயின் வந்தார், பென்பெல்லா காணப்படவில்லை! என்ற நிலைமை இல்லையல்லவா!!

ஆகவே தம்பி! சமூகம் அமளியில் ஈடுபடுத்தப் படாமல் அரசியல் நடைபெற ஜனநாயகம் மிக மிகத் தேவை; மறந்துவிட வேண்டாம், உண்மையான ஜனநாயகம்!!

அல்ஜீரியச் சம்பவத்திலிருந்து நான்பெறும் மற்றோர் கருத்து, விடுதலை வீரர்கள் ஆட்சித் தலைவர்களாகும் போது, சர்வாதிகாரம் செலுத்தலாம் என்ற சபலம் வெகு எளிதாக ஏற்பட்டுவிடுகிறது; அந்தச் சபலத்தை அடக்கினால் மட்டுமே அவர்கள் ஜனநாயகத் தலைவர்க

ளாக முடியும், மக்களும் அவர்களால் பலன் பெற முடியும் என்பதாகும்.

விடுதலை வீரன் நான்! என் குருதி கொட்டி இந்த நாட்டை அன்னியர் பிடியிலிருந்து விடுவித்தேன்! நாட்டு விடுதலைக்காக, சொத்து இழந்தேன், சுகம் இழந்தேன், உயிரையும் இழந்திடச் சம்மதித்தேன் என்று விடுதலை வீரன் பேசும்போது, அந்தப் பேச்சு உள்ளத்தை உருக்கும்; ஐயமில்லை.

அந்த விடுதலை வீரனுடைய செயலைச் சிந்து ஆக்கிப் பாடிடலாம்; கூனன் நிமிருவான், குருடன் பார்வை பெறுவான்.

ஆனால் அந்த விடுதலை வீரன், தான் கொட்டிய குருதிபற்றி நினைவுபடுத்தியபடி, நாட்டு மக்களின் குருதியைக் குடித்து இன்புற எண்ணினால், நாடு சம்மதிக்குமா?

புதிது புதிதாக விடுதலை பெற்ற நாடுகளிலே, எழுச்சி மிக்க தலைவர்கள் உள்ளனர், கோலோச்சும் நிலையில். அவர்களின் அறிவாற்றலை எவரும் குறைத்து மதிப்பிட மாட்டார்கள்; அவர்களுக்கு மக்கள் தமது இதயத்தைக் காணிக்கையாக்கிடத் தயங்கிடவுமில்லை.

ஆனால் அவர்கள் அந்த நிலையுடன் திருப்தி அடைவதாகத் தெரியவில்லை.

கொடுங்கோல் முறிந்தது, செங்கோலோச்ச வந்திருக்கிறார் விடுதலை வீரர், இனி மக்களுக்கு உரிமைகள் தாராளமாக வழங்கப்படும், மக்களின் கருத்தறிந்து அரசு செயல்படும், மக்களில் நலிந்து கிடப்போருக்காக அரசு தனி அக்கறை காட்டும் என்றெல்லாம் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். கனியிலே சுவை காண எண்ணுவதும், விளக்கிலே ஒளி காண விழைவதும், யாழிலே இனிய நாதம் எழும் என்று எதிர்பார்ப்பதும் இயல்பு தானே! அதுபோல.

ஆனால் நாட்டை விடுவித்த மாவீரன், மக்களுக்கு எது நல்லது, எது தேவை என்பது எனக்குத் தெரியும் —எனக்கு மட்டுமே தெரியும்—மக்களுக்குத் தெரியாது என்ற நினைப்புடன் அரசாளத் தொடங்கினால், அவனையுமறியாமல், மக்கள் உரிமையற்றவர்களாகி, அரசிடம் அக்கரை யற்றவர்களாகி, பழைய கொடுமை தொலைந்தது, புதியது புகுந்தது என்றெண்ணிக் குமுறுவர். பல நாடுகளிலே இன்று இந்த நிலை.

ஆப்பிரிக்க பூபாகத்தில் வெள்ளை, பிரன்ச்சு போன்ற வல்லரசுகளிடமிருந்து போராடி விடுதலை பெற்ற நாடுகளில், விடுதலை வீரர்கள் மக்களுக்கு நல்வாழ்வு பெற்றுத் தருகிறோம் என்று அறிவிக்கிறார்கள், ஆனால் மக்களாட்சி முறையை ஏற்க மறுக்கிறார்கள்.

முன்பு அந்த நாடுகளை ஆண்டுவந்த வல்லரசுகள், தமது ஆட்சி முறை பற்றி எவரும் ஏதும் கூற அனுமதி அளித்திடாது இருந்து வந்தது போலவே, விடுதலை வீரர்கள் என்ற விருதுடன் அரசாள வந்துள்ளவர்கள், தமது ஆட்சி முறை பற்றி. மக்கள் அல்லது மக்களின் ஆதரவு பெற்ற தலைவர்கள், மாற்றுக் கருத்தினைக் கூற அனுமதிக்க மறுக்கின்றனர். இதற்காக வேண்டி, தமது நாட்டில் ஆளும் கட்சி தவிர வேறு கட்சி கூடாது என்று சட்டம் இயற்றிவிட்டனர்!! இதற்கு மக்களின் 'சம்மதம்' கிடைத்துவிட்டது, அதற்கான தேர்தல் நடத்தியாகிவிட்டது, ஆகவே இதுவும் ஜனநாயக ஆட்சிதான் — இதுதான் வலிவான, பயனுள்ள ஜனநாயகம் என்றும் வாதாடுகின்றனர்!!

நான் இதுபற்றி இவ்விதம் கருதுகிறேன்!—என்ற பேச்சே, எதிர்ப்பு என்று கருதப்பட்டு, நாட்டுக்குத் துரோகம் என்று அறிவிக்கப்பட்டு, அந்தக் கருத்தே அழிக்கப்படுகிறது; கருத்து பொருளற்றது என்று விளக்கி மக்களைத் தமது கருத்தின் வழி ஈர்த்திடும் முறையினால் அல்ல; மாற்றுக் கருத்தினைக் கூறிடுவோரை மாய்த்திடுவதன் மூலம்; அல்லது விரட்டிவிடுவதன் மூலம், அல்லது சிறையில் தள்ளிவிடுவதன் மூலம்!!

எமக்கு இதயம் தங்கம்! கரம் மட்டுந்தான் இரும்பு!! —என்று கூறுவார் போலுள்ளனர் இந்த ஆட்சித் தலைவர்கள்.

என்னென்ன உரிமைகளை வல்லரசு அழித்துவிடுகிறது என்றுகூறி, மக்களைத் தட்டி எழுப்பி, விடுதலைப் போரினை நடத்தினார்களோ, அதே உரிமைகளை விடுதலை பெற்ற பிறகு அரசாளவந்துள்ள தலைவர்கள் மக்களிடமிருந்து பறித்துக்கொண்டுள்ளனர். வயிறாரச்சோறு! வேறென்னவேண்டும்!! — என்று கேட்கத் துணிகின்றனர்.

காரணம் என்ன காட்டுகின்றனர்? மக்களுக்கு என்ன தேவை என்பது எமக்குத்தெரியும், எப்படித் தருவது என்பதும் தெரியும்; அந்தத்தொண்டிலே நாங்கள் ஈடுபட்டிருக்கும் வேளையில், அவரவர் தத்தமக்குத் தோன்றியதைக்கூறி, கருத்து மாறுபாடு எழச்செய்வது, காரியத்தைக் கெடுத்துவிடும். ஆகவே ஒருவரும் ஆட்சிக் கட்சிக்கு எதிரான கருத்தினைக் கூறலாகாது என்கின்றனர்.

தம்பி! தமது அறிவாற்றலில் அவர்களுக்கு அளவற்ற நம்பிக்கை இருப்பது மட்டுமல்ல. மற்ற எவருக்கும் அத்தகைய அறிவாற்றல் கிடையாது என்ற எண்ணமும் தடித்துக்கிடக்கிறது. முன்னது, தவறான கணக்காகக்கூட இருக்கலாம்; பொறுத்துக்கொள்ளக் கூடியதுகூட; ஆனால் இரண்டாவது இருக்கிறதே, வேறு ஒருவருக்கும், யோசனை கூறிடக்கூடத் திறமையும் உரிமையும் கிடையாது என்ற எண்ணம், அது சகித்துக்கொள்ளமுடியாதது; அது வெறும் அகம்பாவம்; வெறும் அகம்பாவமா! மெள்ள மெள்ள அழிவைத் தந்திடும் அகம்பாவம்.

ஆனால் புதியநிலை பெற்றுள்ள பல நாடுகளில் இத்தகைய அகம்பாவம் அரசோச்சுகிறது; மக்கள் அச்சத்தின் பிடியிலே சிக்கியுள்ளனர்; ஆனால் எப்போது

அங்கெல்லாம் என்ன நேரிடும் என்று கூறிடுவதற்கில்லை; போனவாரம்தானே மகிழ்ச்சிப்பெருக்குடன் முழக்கமிட்டார் பென்பெல்லா, எமது அரசாளும் குழுவிலே எந்தவிதமான பேத உணர்ச்சியும் இல்லை என்று!!

உண்மையான ஜனநாயகம், கூட்டுமுயற்சியில் நம்பிக்கைகொள்கிறது.

புதிதாக விடுதலைபெற்ற நாடுகளிலே, அதன் தலைவர்களுக்கு மக்களின் அறிவாற்றலிலேயும், பொறுப்புணர்ச்சியிலேயும் நம்பிக்கை இல்லாததுமட்டுமல்ல, உடன் உள்ள தோழர்களிடம்கூட நம்பிக்கை இல்லை; அவர்களின் திறமையை ஒப்புக்கொள்ள மனம் இல்லை! உடனிருந்து அரசாளும் அலுவலிலே ஈடுபட்டுள்ளவர்கள் ஒவ்வொருவரும், தாமாக இயங்கிடும் ஆற்றலுமற்றவர்கள், நமது தயவால் வாழ்பவர்கள், நமது கட்டளைக்குக் கட்டுப்படவேண்டியவர்கள் என்ற எண்ணம் மேலோங்கிவிட்டிருக்கிறது.

காவியச் சிறப்புக்குரிய வீரச்செயல் பல புரிந்த ஜோமோகெனியாடா. தனது நாட்டு அமைச்சர்கள் வெளியிடும் உத்திரவுகள் ஒவ்வொன்றும், தன்னால் பரிசீலிக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டபிறகே, நாட்டுக்கு அறிவிக்கப்படவேண்டும் என்ற கட்டளையைப் பிறப்பித்துள்ளார்! இப்படி ஒரு கட்டளையா! ஜனநாயகத்திலா!! என்று எவரும் கேட்கவில்லை. கேட்டிடின் என்ன நேரிடும் என்பது உணர்த்தப்பட்டிருப்பதால்!!

உண்மையான ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், தமது கருத்து மற்ற எவருடைய கருத்தைக் காட்டிலும் மேலானது பயன் தருவது என்பதனை மெய்ப்பித்துக் காட்டமுடியும் என்பதில் தளராத நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

மறுத்துப் பேசுவோரையும் மனம் மாறிடச் செய்திடமுடியும் என்கின்றனர்.

எமது கருத்தினையா மறுக்கின்றீர் என்று எக்காளமிடும் தலைவர்களுக்கு அந்த நம்பிக்கையில்லை கருத்துடன் கருத்து மோதட்டும். சங்கமானால் தணலில் அழிந்திடாது என்று கூறிடும் நெஞ்சுரம் அவர்களிடம் இல்லை. ஆகவேதான் அவர்கள், மாற்றுக் கருத்தைச் சந்திக்க அஞ்சுகிறார்கள்; தமது கருத்துக்காக வாதாடக் கூச்சப்படுகிறார்கள்; போட்டியற்ற பந்தய வீரர்களாக விரும்புகிறார்கள்!!

இம்முறையினால், சிலகாலம், சிலபல நலன்களைக் கூட நாட்டுக்குப் பெற்றளித்திடக்கூடும்; அளித்துள்ளனர்.

அரபுக் குடியரசுத் தலைவர் நாசர் தமது நாட்டுக்கு அஸ்வான்அணை அமைத்துத் தந்துள்ளார்; சூயஸ் கால்வாயின் ஆதிக்கத்தை வல்லரசுகளிடமிருந்து பறித்து எகிப்தின் உரிமையாக்கினார்.

ஆனால் அந்த நாசர் அவருக்கு இணையானவர் என்று பலராலும், அவருக்கு முன்னோடி என்றும் ஒரு காலத்தில் கருதப்பட்ட நகீப் என்பவரை கருத்தளிக்கும் உரிமையுடன் நடமாடவிடவில்லை. அவரைப் பூட்டி வைத்துவிட்டுத்தான், எகிப்துக்குப் 'பொற்காலம்' அளித்திடுவேன் என்று கூறமுடிகிறது. வேறு எந்தக் கட்சியும் கூடாது; தனது கட்சியிலும் வேறு கருத்தினைக் கூறிடத்துணிபவர் ஒருவர் இருத்தல்கூடாது; இது சட்டம்! மக்கள் சம்மதம் பெற்றுவிட்டேன் என்கிறார் நாசர்! இதுவா ஜனநாயகம்? என்று கேட்பவர்களுக்கு, அவருடைய ஆதீனத்தில் இடம்பெற்றுள்ளவர்கள், தைரியமாகக் கூறுகிறார்கள்-மனச்சாட்சியின்படி என்று கூறுவதற்கில்லை-இதுதான் நாசரிசம் என்று!

இந்தப் பாதையிலே மேலும் வேகமாகச் செல்கிறார் ஹேஸ்டிங்ஸ் பண்டா எனும் தலைவர்! இவருடைய மோடார் நெடுஞ்சாலையில் போகும்போது, வேறு எவருடைய மோடாரேனும் முன்னே செல்ல முயன்றால், வழக்கு! தண்டனை! அபராதம்! ஆமாம்! நெடுஞ்சாலையில்-அவர் என்றால், மற்றவர் ஓரம் நிற்கவேண்டும்.

கனு நாட்டு அதிபர் நிக்ருமா, இதிலே மேலும் உச்சிக்குச் சென்றுவிட்டார்.

கனு பல்கலைக் கழகத்தில், நிக்ருமாவின் கருத்துக்கள், பாட நூற்களாகிவிட்டன!

ஜனநாயகம் - சோஷியலிசம் - விஞ்ஞானம்-மதம்-ஒழுக்கமுறை-சட்ட நுணுக்கம் எனும் எதற்கும் அந்தந்தத் துறை வித்தகர்கள் படைத்துள்ள ஏடுகள் என்ன கூறியிருந்தபோதிலும், அவைபற்றி நிக்ருமா என்ன கூறியிருக்கிறாரோ, அந்தக் கருத்துக்களே மேலானவை. ஒப்புக்கொள்ளத்தக்கவை, போற்றப்படவேண்டியன! போதுமா தம்பி! அவர் சென்றுள்ள உயரத்தின் அளவினைத் தெரிந்துகொள்ள? மேலும் வேண்டும் என்கிறாயா! உண்டு! கேட்டிடு!!

அவர் விரும்பியபடி கனுநாட்டு உயர்நீதிமன்றத்து நீதிபதிகள், அரசியல் எதிரிகளுக்குத் தண்டனை வழங்கவில்லை-சட்டம் இடம் கொடுக்கவில்லை-நீதிக்குப் புறம்பாக நடக்க முடியாது என்று கூறிவிட்டனர் என்ன செய்தார் நிக்ருமா? அந்த நீதிபதிகளை வேலையினின்றும் நீக்கிவிட்டார்! தாமே, தமது அரசியல் எதிரிகளுக்கான புதிய தீர்ப்பினைப் பிறப்பித்தார்! இனி கடைசி தீர்ப்பளிக்கும் உரிமை நிக்ருமாவுக்கே என்ற சட்டமும் பிறப்பித்துவிட்டார்! எவ்வளவு உயரம் சென்றுவிட்டார் என்பதனை விளக்குவதுபோல ஒரு திங்களுக்கு முன்பு, நிக்ருமா தம்முடைய உருவச் சிலையைத் தாமே திறந்து வைத்தார்! சிலையின் உயரம் 55 அடி என்கிறார்கள்!

அவ்வளவு உயரமான சிலையை, உயர்ந்தவரின் சிலையைத் திறந்துவைக்கத்தக்க தகுதிவேறு யாருக்கு இருக்க முடியும்-நிக்ருமாவுக்குத் தவிர!! அதனால்தான் அவருடைய சிலையை அவரே திறந்துவைத்தார் போலும்!!

வேறு கட்சி, வேறு தலைவர்கள், வேறு முறை, வேறு கருத்து, தலைகாட்டக்கூடாது. எல்லாம் நிக்ருமாமயம்!! ஏன்? வேறு கருத்து, வேறு தலைவர், வேறு கட்சி தோன்றினால் மக்கள் அதனை ஏற்கமாட்டார்கள்,

தனது தலைமை, தனது முறை, தனது கருத்து இவற்றை மட்டுமே ஏற்பார்கள் என்ற நம்பிக்கை இல்லை; அந்த நம்பிக்கை உண்மையான ஜனநாயகத்தைக்கொண்டிடுவோர் மட்டுமே பெறமுடியும்.

முறை எதுவோ இருக்கட்டும், மக்கள் வாழ்ந்திட வழி அமைத்துக்கொடுத்தால் போதும், அதனை இந்தத் தலைவர்கள் செய்கிறார்கள் அல்லவா என்று கேட்க நினைப்பார்கள், சிலர். துவக்கத்திலே முடியும்; ஆனால் நாளாகவாக தன்னிச்சையாக நடந்துகொள்ளும் தலைவர்களின் தர்பார், தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் காரியத்திலேயே பெரும்பகுதி நேரத்தையும் ஆற்றலையும் செலவிட வேண்டிய நிலையை உண்டாக்கிவிடும். பிறகு நாட்டு நிலை சீர்குலைந்துபோகும்.

கனா நாட்டுப் பொருளாதார நிலைபற்றி நிபுணர்கள் இப்போது கவலை தெரிவித்துள்ளனர்.

கனா நாட்டுக்கு வளம், அங்கு விளையும் கோகோவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலேதான் பெரும்பாலும் கிடைக்கிறது. பொருளாதார விளைவுகள், சிக்கல்கள் பற்றி எண்ணிப் பார்க்காமலும், சந்தை விரிவான முறையில் அமைவதற்கு ஏற்றவிதமான ராஜதந்திர உறவுகளைச் செம்மைப்படுத்திக் கொள்ளாமலும், கோகோ விளைச்சலை மட்டும் பல மடங்கு அதிகமாக்கிடும் திட்டமிட்டார் நிக்ருமா! இந்தத் திட்டத்திலே ஏற்படக்கூடிய கெடுதல்பற்றி எவர்பேசமுடியும்? அவர் திட்டத்தைக் குறைகூறலாமா! நாடு தாங்காது என்கிறதே சட்டம்! எனவே அவர் இச்சை திட்டமாயிற்று; திட்டம் காரணமாக கோகோ விளைச்சல் அதிகமாயிற்று; அந்த அளவுக்குச் சந்தை விரிவாகவில்லை; விலை விழுந்தது; எதிர்பார்த்ததில் பாதி அளவுக்கு வந்துவிட்டது விலை; பொருளாதார நெருக்கடி கனாவில்!!

தன்னிச்சையுடன் நடந்துகொள்ளும் 'அதிபர்'களிடம் உள்ள பல நாடுகளிலே, இன்று இதுபோன்ற சிக்கல்கள்.

சிக்கல்கள் உள்ளன என்பது மட்டுமல்ல; அந்தத் தலைவர்கள் அடக்கிவைக்க வைக்க, எதிர்ப்பு மடிந்துவிடவில்லை. மறைந்து கொள்கிறது; எதிர்பாராத வேளையில் எதிர்ப்பு வெடித்துக் கிளம்பி நாட்டிலே அமளியை, குழப்பத்தை மூட்டிவிடுகிறது; அமளி காரணமாக மேலும் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டுவிடுகிறது. மக்களின் வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுப் போகிறது.

ஜனநாயகத்தை மதிக்க மறுக்கும் தலைவர்களுக்கு ஓர்நாள் ஆபத்து வந்திடும் என்பதுகூட அல்ல முக்கியமான பாடம், அத்தகையவர்களைத் தாங்கிக்கொள்ளும் நாடு, பிறகு தத்தளிக்க நேரிடுகிறது, மக்கள் வேதனைப்பட வேண்டிவந்து விடுகிறது.

விதிவிலக்கு போல சில நாடுகளில் நிலைமை இருக்கலாம்; ஆனால் பொதுவான உண்மை அதனால் பொய்த்துப் போய் விடுவதில்லை.

உண்மையான ஜனநாயகம் ஒரு மரபினை ஏற்படுத்தித் தருவதுடன், ஒரு தலைவர்கள் வரிசையை அமைத்துத் தருகிறது; அல்லது அமைந்திடத் துணை செய்கிறது. ஒரு தலைவர் மறைந்த பிறகோ அல்லது ஓய்வு பெற்ற பிறகோ, அவர் செய்துவந்ததை, அதே முறையில் அதே அளவில், அதே தரத்தில் செய்ய முடியாமற் போயினும், மக்களின் நலனுக்கு ஏற்றவிதத்தில் தொடர்ந்து செய்துகொண்டு போகத் தக்க 'மற்றவர்கள்' கண்ணுக்குத் தெரிகிறார்கள்.

சர்ச்சிலைப்போல ஒருவர் கிடைப்பாரா என்று வியந்து பாராட்டினார்கள், திகைத்துக் கூறிடவில்லை; ஏனெனில், ஈடன், மாக்மிலன் என்றுபலர் கண்ணுக்குத் தெரிந்தனர் வரிசையில்!

தொழிற் கட்சியிலும் அவ்விதமே! அட்லி இருந்து வந்த இடத்திற்கு ஒரு வில்சன் கிடைத்திருக்கிறார்—இடையிலே பெவான்—மாரிசன்—கெயிட்ஸ்கில் எனப் பலர்.

ஜனநாயகத்தில், ஓரோர் சமயம் வியப்பளிக்கத் தக்க நட்சத்திரங்களாகத் தலைவர்கள் சிலர் திகழ்கின்றனர் என்றாலும், தொடர்ந்து ஒளிதரத்தக்க திருவிளக்குகள் வரிசையாக உள்ளன. இடியோசையுடன் போட்டியிட முடியாது முரசு! ஆனால் முரசொலி தொடர்ந்து கிடைக்கும்; கரத்தின் தரத்துக்குத் தக்கபடி நாதம் எழும்! இடியோசை கிடுகிடுக்க வைத்திடும், ஆனால் ஓசை தொடர்ந்து இருந்திடாது. இடியோசையில் கிடைத்திடாது இன்பநாதம்!

ஜனநாயக முறையை மாய்த்திட்ட முறை இடியோசை என்றால், ஜனநாயக முறையை முரசுக்கு ஒப்பிடலாம்!!

தம்பி! நாம் உண்மையான ஜனநாயகத்திலே பற்று மிகுதியாகக் கொண்டுள்ளதால்தான் அந்தக் கடமையைச் செய்வதிலே எத்தனை இன்னல் ஏற்படினும் பொறுத்துக் கொள்கிறோம். எத்தனை இழிமொழிகளை, பழிச்சொற்களைத் தாங்கிக்கொள்கிறோம! பறந்து செல்லும் காக்கை எச்சமிடுகிறது; பாதையிலே செல்பவனின் பட்டுச்சட்டை பாழ்படுகிறது! அதனால் பயணம் நின்றுவிடுவதில்லை.

உண்மையான ஜனநாயகத்திலேதான் ஒவ்வொருவருக்கும் தத்தமது திறமைக்கேற்ப, பணியாற்றிடும் உரிமை கிடைக்கிறது, கிடைப்பதனால் சமுதாயத்துக்கு கூட்டுப்பணியின் பலன் முழுவதும் கிடைக்கிறது; மேம்பாடு பெறுகிறது.

அல்ஜீரியாபோல விடுதலைபெற்ற நாடுகளிலே, பென்பெல்லா போன்றவர்கள், ஜனநாயகமுறையை மேற்கொள்ளாததால் அந்த நாடுகளிலே உள்ள எத்தனையோ நல்லறிவாளர்கள் மூலம் கிடைத்திடக்கூடிய நலன் நாட்டுக்குக் கிடைத்திடாமல் போகிறது. யாழுக்குப் பல அன்றோ நரம்புகள்! இசை நேர்த்தியாகக் கிடைக்கிறது! ஒற்றைக்கம்பியிலும் இசைக்

கருவி உண்டு! பெரிதும் பிச்சைக்காரரின் கருவியாகி விடுகிறது.

டாக்டர் சுகர்னோ உண்மையான ஜனநாயக முறையில் இந்தோனேஷியாவை நடத்திச் சென்றிருப்பாரானால், அந்த நாட்டுப் பேரறிவாளர் என்று மதிக்கப்பட்டுவந்த டாக்டர் ஹட்டாவின் திறமை மிக்க பணியினால், நாட்டுக்குப் பயன் கிடைத்திருக்குமல்லவா? இன்று?

உண்மையான ஜனநாயகம் அற்ற நாடுகளில், காட்டில் காய்நத நிலவாக, புழுதியில் புதையுண்ட மாணிக்கங்களாக, எத்தனை எத்தனைபேர்களோ? யாரறிவார்!! அதனால்தான் எத்தனை பளபளப்பினைக் கூட்டிக் காட்டினாலும், ஜனநாயகமற்ற நாடுகள், அந்தச் சமூகத்திலே கிடைக்கத் தக்க அறிவுச் செல்வம் முழுவதையும் பெற்றுத் திகழ்ந்திடும் நிலையினைப் பெற்றிடா. ஒவ்வொரு கதிரிலும் மணிகள் உண்டு! மொத்தம் கிடைத்தாலே செந்நெற் குவியல்!!

பொதுவாக ஏற்பட்டுவிடும் இந்த இழப்புடன், ஜனநாயகமற்ற நாட்டிலே உள்ள தலைவர்கள், எத்தனை வலிவான பாதுகாப்பு அரண் அமைத்துக்கொண்டிருந்தாலும், ஆபத்து அவர்களைத் தாக்கிட எப்போதும் மோப்பம் பிடித்தபடி இருக்கும்.

இதனை பயங்கரமான அளவில், தென் அமெரிக்க நாடுகளிலே காணலாம்.

இப்போது உலகமுழுவதும் பேசிக்கொள்ளப்படும் டோமினிகன் நாடு, தென அமெரிக்காவில் உள்ளது; நான் குறிப்பிட்ட நோயினால் பாதிக்கப்பட்ட இடம்.

இப்போது அங்கு அமெரிக்கப்படை தலையிடுவது பற்றிய கருத்தினை விளக்க இதனைக் கூறவில்லை. அமளியும அதிர்ச்சியும், உள்நாட்டில் புரட்சியும் வெளியார் தலையீடும் ஏற்பட்டதற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணத்தை மட்டுமே விளக்க முனைகிறேன். ஜனநாயக முறையற்ற நிலையே இத்தனை கோளாறுக்கும் அடிப்படை.

டோமினிகன் நாட்டிலே ஒரே கட்சி, ஒரே தலைவர்! என்ற நிலையில், முன்னம் ஓர் தலைவன் இருந்தான்; நாடு கொண்டாடும் நிலையில்; நானிலம் பாராட்டும் நிலையில்!

நமது ரட்சகன்! நமது வழிகாட்டி!!—என்ற விருதுகள் பெற்றிருந்தான்! சூட்டிககொண்டிருந்தான் என்று சொல்லலாம். எந்த அளவுக்குப் பைத்தியம் முற்றியிருந்தது என்றால், தம்பி! அந்த நாட்டிலே ஒவ்வொரு மருத்துவ மனையின் நுழைவு வாயிலிலும் கொட்டை எழுத்தில் எந்த நோயையும் தீர்த்திடும் மருத்துவன் எமது தலைவன் ட்ரோஜில்லோ என்ற விளம்பரப்பலகை தொங்கவிடப்பட்டிருந்ததாம் இறுதி? மோட்டாரில் செல்கையில் சுடடுக்கொல்லப்பட்டான்; பிணத்தை ஒரு குப்பை மேட்டிலே வீசி எறிந்துவிட்டுப் போயினராம் புரட்சிப் படையினர்.

இது போன்ற படுகொலைகள் பதைபதைக்கும் நிகழ்ச்சிகள் நெளிந்தபடி உள்ள இடம் டோமினகன் நாடு.

இந்த நாடுகளில் பொதுஉடமையாளர்கள் ஆதிக்கம் செய்ய முனைகிறார்கள், அமளி மூட்டுகிறார்கள்; ஆகவேதான் நாங்கள் தலையிட்டு அமைதி ஏற்படப் போரிடுகிறோம் என்று அமெரிக்கத் தலைவர்கள் பேசுகின்றனர்.

அது முறைதானா, காட்டும் காரணம் உண்மைதானா என்பது வேறுவிஷயம்; ஆனால் நான் இப்போது, தம்பி! கூறவிரும்புவது உணமையான ஜனநாயகம் இல்லாததுதான். இதற்கும் காரணம் என்பதனைத்தான்.

காஸ்ட்ரோவிடம் உள்ள க்யூபாவில் வலிவான அரசு இருக்கிறது. ஆனால் அங்கும் ஜனநாயகம் இல்லாததால், கருத்து மாறுபாடுகொண்டவர்கள் கலாம் விளைவித்தபடியும், புரட்சி மூட்டிடும் திட்டம் வகுத்தபடியும் அதற்கு அமெரிக்க உதவியை நாடியபடியும் உள்ளனர்; எபபோது வெடித்திடும? எரிமலை கக்கும்? என்று கூறுவதற்கில்லை. இப்போதைக்கு, க்யூபாவுககு கண்கண்ட கடவுளாக காஸ்ட்ரோ இருக்கிறார். அவர்போல மற்றவர்கள், தொடர்ந்து கிடைப்பார்களா? ஜனநாயகம் இல்லையே, வரிசையைத்தந்திட!

இப்போதே, ஸ்பெயின் நாட்டில், பிராங்கோவுக்குப் பிறகு யார்? என்பதுபற்றி பீதியுடன் கேட்கத் தலைப்பட்டுள்ளனர். க்யூபாவிலும் சரி, சர்வாதிகாரத் தலைவர்கள் நடத்திச்செல்லும் நாடுகள் எவை எனினும் அங்கெலாம் இந்தக் கேள்வி எழத்தானசெய்யும—அதற்கான பதில், அட்லிக்குப் பிறகு வில்சன் என்ற முறையில் அமையாது. அத்தகைய நாடுகளில் அரசோச்சுபவர்களின் அரியணை எரிமலையின் முகட்டிலேதான் இருக்கிறது.

பொலீவியா நாட்டுத் தலைவர் ஜெனரல் ரேனே பாரியன் டோஸ். இராணுவ ஆட்சி நடத்தி வருகிறார்! ஆனால் எதிர்ப்புகள் குமுறியபடி உள்ளன! பலமுறை அவரைக் கொலல முயறசிகள். தப்பிததுககொணடார். ஆனால் அவருடைய தலைமீது குறிவைத்தபடி உள்ளனர் அரசியல் பகைவர்கள்! ஏன்? அங்குதான், மககளின் ஒப்புதலைப்பெற்று, ஆட்சித் தலைவரை மாற்றிடும் உண்மையான ஜனநாயகம் இல்லையே!

கவுடமேலா எனும் நாட்டில் துணைத்தலைவர் துப்பாக்கியால் சுடப்பட்டுச செத்தார்! சிறிதளவு வளமாக உள்ள நாடு வெனிஜூலா, அங்கும அமைதி இல்லை; எதிர்ப்பு; அமளியின அறிகுறிகள்.

கொலம்பியா நாட்டில் பகைப்புயல்! அதிபர் படை பலத்தைககொணடு, ஆபத்தைத் தடுத்து வருகிறார். எத்தனை நாளைககு எனற கேள்வி.

அர்ஜெண்டினா நாட்டில் விரட்டப்பட்ட சர்வாதிகாரி பெரான் மீண்டும புகுந்துவிடக்கூடும் என்ற பீதி. பெரானின் கூட்டாளிகள, அரசினை எதிர்த்து அமளிகளை மூட்டியபடி உள்ளனர். ஈக்வடார் நாட்டிலும் உராகுவே நாட்டிலும் நிம்மதியான வாழ்க்கை நடதத முடியவில்லை மககளால்; வேலை நிறுததங்கள், பொருளாதாரச் சீர்குலைவு; அடக்குமுறை.

பிரேசில், சிலி, பெரு எனும் நாடுகளில் நிலைமை ஓரளவு கட்டுக்கடங்கியதாக இருப்பதாகக் கூறுகிறார்கள்.

மொத்தத்தில், ஜனநாயக முறையும் மரபும் அமையாததால் தென் அமெரிக்க நாடுகள் பலவும் அமளிக் காடுகளாக உள்ளன.

அந்த நிலையில், அங்கு உள்ள மக்கள், எதற்கும் துணிநத 'பேர்வழிகள்' ஆகிடவேண்டி நேரிட்டுவிடுகிறது. ரயிலை நிறுத்திக் கொள்ளை அடிப்பது, பாங்கி

களைக் கொள்ளை அடிப்பது, தலைவர்களைக் கடத்திச் செல்வது, வீடு புகுந்து கொலை செய்வது இவைகள் நடைபெற்றபடி உள்ளன. அரசு, துப்பாக்கியின் துணையில்!

இவ்விதமான நாடுகளில் மக்கள், நிம்மதி பெறுவது ஏது! வாழ்க்கை செம்மையடைவது எப்படி முடியும்? மக்களாட்சி இல்லை; மக்கள் மக்களாக இல்லை.

அமைதியான வாழ்வு கொண்ட சமூகந்தான், அறிவு வளர்ச்சியில், அக்கறை காட்டிட முடியும்; அதன் மூலமாகத்தான் உலகத்தின் பொதுச் சொத்தான அறிவுச் செல்வம் மேலும் மேலும் வளர்ந்து, மனிதகுல மேம்பாட்டினுக்கு உதவிட முடியும் மக்களாட்சி இல்லாத நிலையில், பெரும்பாலான மக்கள் ஓநாயிடம் சிக்கிய ஆடுகளாகவோ, அல்லது பட்டியில் போட்டடைக்கப் பட்டவைகளாகவோ ஆக்கப்பட்டு விடுவர்; மனிதத்தன்மை மாய்ந்துவிடும். கற்காலத்திலே இருந்துவந்த நிலைமையை நோக்கி மனிதகுலம் துரத்தப்படும் கொடுமை படை எடுத்திடும்.

ஆகவே தம்பி! ஜனநாயகம் ஒரு அரசுமுறை மட்டுமல்ல, வாழ்க்கை நெறி; மனிதத் தன்மையை மேம்பாடுடையதாக்கிட வல்ல மார்க்கம். ஆகவேதான்,

பயல்களுக்கு என்ன தெரியும்,
ஒழித்துக்கட்டிவிடுவேன்
ஓடஓட விரட்டி அடிப்பேன்
காலிகள்—கூலிகள்—கபோதிகள்,
பதவிப் பைத்தியங்கள்,
வகுப்புவாதிகள்,
நாட்டைக் காட்டிக்கொடுப்போர்,
கோழைகள், கோமாளிகள்,

என்றெல்லாம், ஆளவந்துவிட்டோம் என்ற ஒரே காரணத்தால் சிலர் தூற்றித் திரிவதையும் தாங்கிக்கொண்டு, நாம் உண்மையான ஜனநாயகத் தொண்டாற்றிக்கொண்டு வருகிறோம். நமது நோக்கம் தூய்மையானது என்பது நமது நினைவிலே இருத்தல் வேண்டும்; நடையில் தளர்ச்சி ஏற்படாது; பார்வை பழுதுபடாது; வெற்றி பெற்றிடுவோம்.

அண்ணன்,

அண்ணாதுரை

தித்திக்கும் செய்தி!

காஞ்சி

ஆண்டு மலர்-1965

தூலைத் திங்களில் வருகிறது.

சுவையும் பயனும் மிக்க
கட்டுரைகள், கதைகள், கவிதைகள்.
எழுத்தாளர் பலர் தீட்டிடும்
எண்ணற்ற எழுத்தோவியங்கள்.
இவற்றோடு

அண்ணா

அளித்திடும்

★ தழும்புகள்
★ அம்பாள் கடாட்சம்
★ சமதர்மமும் சர்வேஸ்வரனும்
★ மடல்

முதலிய கருத்தோவியங்கள்!
தேவைகுறித்து உடனே தெரிவிக்கவும்.

விலை ரூ. 1-00



தும்பைப்பூ

எஸ். எஸ். தென்னரசு

2

“குருவம்மா, சக்குவைப் பத்தரமா பாத்துக்க; மதுரை ஒரு மாதிரிப்பட்ட ஊரு. கக்கத்துக்குள்ளே கர்ணம் பாயிற பயலுங்கல்லாம் இருக்கிற பட்டணம். பத்து நாள்லே வந்து ரெண்டு பேரையும் கூட்டிப் போறேன்” என்று சொல்வதற்குள் சேர்வை இருபது தடவைகள் மேல் மூச்சு வாங்கிவிட்டான். குருவம்மா தனிமையில் இருந்து கணவனை நினைத்து கண்ணைக் கசக்கும் போதெல்லாம், ‘ஏம்மா சும்மா கண்ணைக் கசக்கிக்கிட்டே இருக்கே! தெய்வம் நின்னுதான் கேட்கும்! சும்மா இரு! அழுதா வர்திருமா! உள்ளூர் சம்பந்தம் வேணும் வேணும்னு தலையிலே அடிச்சுக்கிட்டேனே, நீயும் உங்கம்மாவும் கேட்டாத்தானே! அத்தை மகனனே நீ, தம்பி மகன்னு அவ, இப்ப என்ன ஆச்சு! அவ கண்ணை மூடிட்டா, நீ காத்தா பறக்குறே! உன் புருஷன் நாடோடியாப் போயிட்டான்” என்று சொல்லிக்கொண்டே தேம்ப ஆரம்பித்து விடுவாள். குருவம்மா, பிறகு செண்பகஞ் சேர்வைக்கு ஆறுதல் சொல்லுவாள் குருவம்மாவுக்கு கலியாணமான மறு வருஷமே அவள் தாயை இழந்துவிட்டாள். அதற்குப் பிறகு செண்பகஞ் சேர்வை மணம்புரிந்து கொள்ளவேயில்லை. அவன் தனது அன்பு, பாசம் எல்லாவற்றையும் மகளிடமே வைத்துவிட்டான். குருவம்மாவுக்குப் பெண் பிறந்ததும் சக்கு என்று பெயர் வைத்ததும் செண்பகஞ் சேர்வைதான். சக்கு அவனது மனைவியின் பெயர். பாட்டி பெயரை பேத்திக்கு வைக்கது, பாட்டன் பெயரை பேரனுக்குச் சூட்டி ஒரு தலைமுறை முந்திய தலைமுறையை மறக்காமல் இருக்கும் தமிழ் நெறியை சேர்வை அப்படியே பின்பற்றினன்.

செண்பகஞ் சேர்வை அணைக்கட்டு வேலைக்குப் போய்விட்டான். அங்கே அணைக்கட்டுக்குப் பக்கத்தில் ஒரு தமிழ்க் கிராமமே அமைந்திருந்தது. ஒவ்வொரு கொத்தனுரும் குடியும் குடித்தனமுமாக வந்திருந்தார்கள் இரவு நேரங்களில் நீரும நிலவொளியும் சந்தித்துச் சல்லாபித்துக் கொள்ளும் போதெல்லாம் சேர்வைக்கு இளமை நினைவுகள் வீறிட்டுக் கிளம்பி விடுவதுண்டு. ஆனால் அடுத்த கணமே அந்தத் தாகம் தணிந்துவிடும். ‘எனக்கே இந்தக் கதியினு. எம்மக குருவம்மாவுக்கு எப்படி இருக்கும்! முப்பத்தஞ்சு வயதுதானே ஆகுது! நா பெத்த மக ஈயா துடிக்குமே! சே! எம்மக தெய்வந்தான. சண்டாளப் பய ஏமமருமகன் இப்பேர்ப்பட்ட பொண்ணு மேலேயும் பழியைச் சுமத்திட்டு ஓடிப் போயிட்டானே! அவன உருப்படுவானு?—அணைகட்டில ஒவ்வொரு நாள் இரவும் செணபகம் புலம்பத்தான் செய்தான் புலம்பல ஒருதத்துவம்தானே மனதுக்கு வேண்டுமானல் அது ஆறுதலாக இருக்கலாம்; அதனுல பரிகாரம் கிடைக்குமா?

மறு வாரமே செண்பகஞ் சேர்வை மதுரைக்குப் போய் குருவம்மாவையும் சக்குவையும் அழைத்துக் கொண்டு அணைக்கட்டுக்கு வந்துவிட்டான். எல்லாருக்கும் போல் செண்பகத்துக்கும் ஒரு ஓலைகுடிசை கிடைத்தது. அரசாங்கத்தின் கருணையால் வாடகை இல்லாமல் தொழிலாளர்களுக்குக் கிடைத்த மண்மாளிகை அது. கறையான் புற்றுககளைப்போல் கும்பல் கும்பலாக குடிசைகள் அமைந்திருந்தன.

“கொத்தனர் இருக்காரா?” குடிசைக்கு வெளியில் நின்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டு குருவம்மா வெளியில் வந்தாள்.

“கொத்தனுரு எங்கே போயிட்டாரு?”

“சம்புளிபுத்தூருக்குப் போயிருக்காரு அப்பா! இப்ப வந்திருவாரு! நீங்க யாரு?” குருவம்மா கேட்டாள்.

“செந்தூர்ப் பாண்டி எம்பேரு!”

“அப்பா வந்ததும் சொல்றேன்.” என்று குருவம்மாசொல்லிக்கொண்டிருக்கும்போதே செண்பகம் வந்துவிட்டான்.

“வாங்க மேஸ்திரி தம்பியா? குருவம்மா, சுயத்துக் கட்டிலே தூக்கிப் போடம்மா!”—செண்பகத்தின உபசரணை பலமாக இருந்தது.

“இல்லே, இல்லே! நா ஒரு முக்கிய சோலியா வந்தேன். நாளைககி பத்து சித்தாளு தேவைப்படுது; அதான் நமக்கு வேண்டியவங்களா பாத்து ஏற்பாடு பண்ணிக்கிட்டு வர்றேன்,

இங்கேயாராச்சும் வரச் சௌகரியப் படுமான்னு கேட்கலாம்னு வந்தேன்.” செந்தூர் கேட்டான்.

“இங்கே அப்படி இல்லையே தம்பி. குருவம்மா வீட்டைப் பாத்துக்கணும். சின்னஞ் சிறிசு இருக்கிற வீடு.........” இப்படி செண்பகம் சொல்லி முடிப்பதற்குள் செந்தூர் குறுக்கிட்டான்.

“அக்கா வீட்டைப் பூட்டிப்புட்டு வந்துட்டாப் போகுது!”

“அது மட்டுமா வந்திடலாமே! எம்பேத்தி இருக்கறதே! அதெ எப்படித் தம்பி வேலைக்கி கூட்டி வர்றது! சின்னப் பொண்ணு” என்றான் செண்பகம் சோகமாக.

செந்தூரின் கண்கள் குடிசைக்குள் மேய்ந்தன. இருட்டுக்கும் ஒரு ஒளி உண்டல்லவா! அந்த ஒளியில் சக்குவின் கண்கள் மட்டும் நீர்க்குமிழிபோல் மின்னின.

“நமக்குச் சம்பாத்தியம் பெரிசில்லே தம்பி. ஊரையும் பேரையும் காப்பாத்திக்கணும். சம்பாத்தியத்தை எப்பவும், எதிலேயும் சம்பாதிக்கலாம். மரியாதையை லேசிலே சம்பாதிக்க முடியுமா? பாழடைஞ்ச மாளிகையிலே சுலசமா இருப்பதை விட, உறுதியான சின்னக் கட்டடத்துக்கு அஸ்திவாரமா இருப்பது உத்தமம்னு பெரிய கொத்தனாரு அடிக்கடி சொல்லுவாரு தம்பி” செண்பகஞ் சேர்வையின் பேச்சில் செந்தூர் பிரமித்துவிட்டான் அவன் போனபிறகு குருவம்மா முணுமுணுத்தாள்.

“எப்பா, ஒரே வார்த்தையிலே சொல்லிப் போகச் சொல்லாமெ, கதையெல்லாம்பேசிறீங்களே எதுக்காக? அந்த ஆளைப் பார்த்த ஒடனேயே எனக்குப் புடிக்கல்லே! கண்ணிலே கள்ளியம்பாலை அடிக்க, ஏந்தான் இப்புடி பொம்பளைங்களெப்பாக்கிறாரோ தெரியல்லே!” குருவம்மா கிட்டித்தாள்.

“ஸ்...ஸ்...மெதுவா! அடுத்த வீட்டுக்காரன் காதிலே விழுந்திடப் போகுது. நமக்கெதுக்கம்மா பொல்லாப்பு. கேட்டான்; முடியாதுன்னு சொல்லிட்டோம். அவ்வளவுதானே! இந்தா பாரு குருவம்மா, யாரைப் பத்தியும் நீ முடிவு கட்டலாம்; உரிமை இருக்கு. ஆனா அதை வெளிக் காட்டிக்க ‘ரைட்டு’ இல்லே இது தெரிஞ்சவங்கதான் அடக்கமா இருக்காங்க. மத்தவங்க கண்டதெப் பேசி வாய் புழுத்துதான், மாங்கா பழுத்துதான்னு மல்லுக்கு நிக்கிறாங்க!”—செண்பகம் அனுபவத்தை அள்ளித் தெளித்தான்.

“சக்கு, உங்க தாத்தா காந்தியாயிட்டாருடி! அப்பா, நம்மெப் போல கூலிங்கட்டே இருக்கிற எங்கக் குணத்துக்கும் மதிப்பிருக்காதப்பா! சீமான் பொறுமையா இருந்தா மகாத்மான்னு சொல்லுவாங்க. நீங்களும் நானும் பொறுமையா இருந்தா ‘வக்கத்ததுங்க’ன்னு சொல்லுவாங்க. நீங்க இன்னும் திருமலை நாயக்கரு காலத்திலேயே இருக்கீங்க!” குருவம்மாவின் விளாசலைக் கேட்டு சக்கு சிரித்தாள்.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டு செண்பகம் மனதுக்குள்ளே சிரித்தான். அதில் அவனுக்கொரு திருப்தி மகள் குதூகலமாக இருக்கவேண்டுமென்பதுதானே அவனது வாழ்க்கையின் குறிக்கோளாகி விட்டது.

எம் மகள் எவ்வளவு புத்திசாலித்தனமாப் பேசுது! ஏழாம் வகுப்புப்படிச்சுட்டே இப்படிப் பேசுதே......பத்தாங் கிளாஸ் வரை படிச்சிருந்தா வாத்தியாரம்மாவாக்கூட வந்திருக்கும்! எம் புத்தியெச் சோட்டாலடிக்கணும். அவசரப்பட்டு இப்படிக் கெடுத்துப்புட்டேன்.”—கப்பல் கவிழ்ந்த பிறகு உபகரணங்களைப்பற்றிச் சிந்திக்கும் முன்யோசனையில்லாத மாலுமியைப்போல் செண்பகம் கற்பனையில் மிதந்தான்.

“அப்பா!” குருவம்மா எதையோ சொல்லவாயெடுத்தாள்.

“ஸ்...ஸ்...ஸ்! செந்தூர் வர்றான். பேசாமெ இரும்மா! அவன்

ஒரு வெடிச்சபய! அவன் நெனேச்சா இப்ப நம்மை வூட்டுக்குப் போக வச்சுப்புடலாம். எப்படியோ அவன் மேலே அதிகாரிகளுக்கு ஒரு மயக்கம் கண்டு போச்சு! பெரிய நாட்டாமைக்காரன் மாதிரியில்ல பரிபாலனம் செய்யிருன்!—

"ஏ மூதேவி, சர்க்காரு பணம் லைவிககிமா? சோத்துக்குத் தாளம் போட்டதுகளேக் கொண்டாந்து கூலிக்கி வெச்சா இப்படித்தானே! ரத்தம் ஊறிட்டா உறுமுவாங்க! வயிறுவத்திப் போயிட்டா உயிரைக் கொடுக்கிறேன்பாங்க. இதுங்க பொழெப்பே இப்புடித்தான்"-வேலே பாக்கிறவுங்களே இப்புடி சுளீர் சுளீர்னு பேசருனே பாவி—செண்பகம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே செந்தூர் அருகில் வந்துவிட்டான்.

"ஒரு ஆளு கொறையுதே கொத்தனுரே! நீங்க என்னமோ யோசிக்கிறீங்க!" பேசினுனே தவிர, செந்தூரின பார்வை குடிசைக்குளதான் இருநதது.

"பாத்தீங்களா, பாத்தீங்களா; அந்த ஆளு பாக்கிறதை!" குடிசைககுளளிருந்தே எரிச்சலோடு முணஙகினுள குருவமமா.

"என் நெலமையைச் சொல்லிட்டேன். அதுக்குமேலே நா என்ன செய்யறதுக்கு இருக்கு" — செணபகஞ் சேர்வையின் பதில் வாசலில் நினற செந்தூருக்கும, உள்ளேயிருந்த குருவம்மாவுக்கும் சோந்த பதிலாக இருந்தது. செந்தூர் போய் வீட்டான. அவன தலைமறையும் வரை காத்திருந்துவிட்டு செணபகஞ்சேர்வை குருவமமாவுடன் பேசினுன்.

"அம்மா இது தோளிலே உக்காந்து செவியக் கடிககிற காலமம்மா! இங்கே இருக்கிற ஆயிரம் கூலிகளுககும் விதி, பிராப்தம எதுவும் தனியா இல்லே! செந்தூரன் பேச்சுததான இபப நமக்கெல்லாம் விதி. விதியோட விளேயாடுராப்பிலே நாமஇல்லே. தெரிஞ்சுக்க! வெட்டிப் பேசுறதிலே ஒஙகமமாவையும் மிஞ்சிட்டேபோ!"

"பயந்து பயந்து நாம என்னத்தைக் கண்டுட்டோமாம்!"

"பயம் வேறே, மரியாதெ வேறேம்மா! வலுவலே நாம ஏன் ஒரு எதிரியை சபபாதிச்சுககணும்! ஆயிரமபேர் நமககு சிநேகிதமாக இருந்தாலும் நம்மை அவங்க எப்போதாவதுதான் பாப்பாங்க; ஆனு நமக்கு ஒரு எதிரி இருந்தா போதும் அவன் அடிக்கடி அளிம்பு பண்ணிக்கிட்டே இருப்பான; தூங்கவிட மாட்டான். எதுக்கு இதெல்லாம் பொழைக்க வந்த எடத்திலேன்னு பாக்கிறேன்." கனிவாகச் சொன்னுன் செணபகம்.

குருவம்மாவின் துடுக்குத்தனம் செண்பகஞ்சேர்வைக்குப் பிடிக்கவில்லேயென்ருலும் உள்ளேர அவளது தூய்மையை — அன்னிய ஆடவர்களே நெருங்கவிடாத கெட்டிய உள்ளத்தை நினேத்துப் பூரிக்கத்தான் செய்தான்.

"கிளியை வளர்த்துப் பூனேயிடம் கொடுத்தேனே நானெரு புத்திகெட்டவன். புலியாப்பாயிது வேத்தாளேப் பாத்தா! அதைக் கெட்டுப் போனவள்னு சொல்ருனே அந்தச் சொரணே கெட்டவென்; அவனுக்குச் சாதகமா நீதியும் தூங்கிப் போச்சு சக்குவெப் பார்த்தாலே தெரியுமே எம் மக கெட்டுப் போனவ இல்லேன்னு!" — குருவம்மாவின் கடந்த காலததை நினேத்து செண்பகம் பொருமினுன்.

மனம் துன்பப்படும்போதும், துள்ளிக் குதிக்கும்போதும் மனிதன் நிலே மறந்து குழந்தையாகிவிடுகிருன். அப்போது அவன் வெறித்தனமாகக் கதறுகிருன்; அல்லது மூச்சடைக்கச் சிரித்துக் குமுறுகிருன். எதுவும் அளவு கடந்துவிட்டால் அது ஒருவகைப் போதையாகி விடுகிறது.

வெளியில் நின்றுகொண்டிருந்த செண்பகம் குடிசைக்குள் நுழைந்தான். தூசி படிந்து கிடந்த அவளது கணவனின் படத்தை குருவம்மா துடைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

பெண்கள் சபலேகள்; பட்ட துன்பங்களே இலகுவில் மறந்துவிடுகிருர்கள்—என்று நினேத்த செண்பகஞ்சேர்வை பார்த்தும் பார்க்காதது போல் குடிசையை விட்டு வெளியேறிவிட்டான்.

4-ம் பககத் தொடர்ச்சி

கொடுக்கிருர். அது ஆராய்ச்சி கூடத்திற்கு செல்கிறது.

நேரம் 10-10!

டாக்டருககு சந்தேகம் தீரவில்லே.

இருதயத்திற்கு அருகில்-முக்கியமான இரத்தக்குழாய்க்கு அருகில் சந்தேகததிற்குரிய கருப்புப் புள்ளிகள், நுரையீரலில்.

இதற்கிடையில் டாக்டர்களுக்குள் உரையாடல் நிகழ்கிறது.

"ஏன் சந்தேகம், இந்த நுரையீரலே எடுத்துவிட்டால்."

"முடியாது, ஒரு நுரையீரலுடன், இவரால் இருக்கமுடியாது. இவர் தாங்கமாட்டார்"

"சரி, இடது நுரையீரலின் மேல் பாகத்தையே எடுத்துவிடுவோம்" (இடது நுரையீரல் இரணடு பாகங்கள் உடையது.)

உடனே, அந்த பாகத்திற்கு போகும் இரததக்குழாய்கள் அறுக்கப்பட்டு, முடிபோடப்படுகின்றன. பிறகு அந்த பாகமும் எடுக்கப் படுகிறது!

அந்த பாகம் ஆராய்ச்சி கூடத்திற்கு அனுப்பப்படுகிறது! இடது நுரையீரலுக்கு வரும் முக்கிய காற்றுக் குழாய் தைக்கப்படுகிறது. 'செலேன' கொஞ்சம் ஊற்றப்படுகிறது—மார்புக் கூட்டுக்குள். ஏதாவது, ஓட்டை இருக்கிறதா என்பதை கண்டுபிடிக்க (சைக்கில் 'டியூப்' ஓட்டையை சண்டுபிடிக்க, காற்றடிதது, தண்ணீரில் அமுக்குவதுபோல்)

ஓட்டை ஏதும் தெரியவில்லே 'செலேன்' எடுக்கப்படுகிறது. வரிசையாக, முன்பு எடுக்கப்பட்டதுபோல், ஒவ்வொரு அடுக்காக வைத்துதைககப்படுகிறது. கடைசியாக தோலும தைக்கப்படுகிறது.

இப்போது மணி 12-20!!

அறுவை சிகிச்சை முடிய ஆன நேரம—கிட்டத்தட்ட நான்குமணி நேரத்திற்குமேல்.

நோயாளி பொதுவாக தன் நினேவை அடைகிருர். இன்னமும் சில நாட்களில் நோயாளி வீட்டுக்குப் போகலாம். அவா இனிமேல் பிழைத்துக்கொள்ளவேண்டும்.

டாக்டர்களால் முடிந்ததை செயதுவிடடார்கள்!

(ரீடாஸ் டைஜஸ்டில் வந்த கட்டுரையைத் தழுவியது.)

சித்தர் நவலோக கல்பம்

[Regd]

இது ஆஸ்துமா, ஆனைக்கால், வெண்குஷ்டம், குழிப்புண், ரணம்பெருத்த சரீரம் சிறுக்க

மற்றும் பல வியாதிகளையும்
தீர்க்க உதவுகிறது இந்த

சித்தர் நவலோக கல்பம்

சர்க்கார் ரசாயன சாலையில் பரிசோதிக்கப்பட்டது. நாங்கள் சித்த சாஸ்திரப்படி பஸ்பம், செந்தூரம் சுணணம் மெழுகு கட்டுவகை எண்ணை, தைலம், லேகியம், சூரணம் முதலியன தயாரிக்கிறோம். ஆகவே, தாங்கள் ஒருமுறை எங்கள் வைத்தியசாலைக்கு விஜயம் செய்யுங்கள.

கிளை வைத்தியசாலை:
G S T. ரோடு 39-வது மைல்
பாலாற்றங்கரை, மாமண்டூர் வடபாதி, செங்கற்பட்டு ஜில்லா.

மேற்கண்ட கிளை வைத்தியசாலையில்:-பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளிலும்
சென்னையில்:- ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளிலும்
நாமே வியாதியஸ்தர்களை கவனிக்கிறோம்.



சித்த வைத்தியர்
சாது
வீ. நாராயணசாமி பிள்ளை

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

[Regd]

5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
போன் நெ. 84786

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால்
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது ஆசிரியர் சி. என. அண்ணாதுரை